

# பெற்றோல் விலை 5 ரூபா அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 6
பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தின் படி, ஒக்ரேன் 95 ரக பெற் »04

Registered as a Newspaper

உதயன்

சுடர் : 41
கதிர் : 41

செவ்வாய்க்கிழமை
06 ஜனவரி 2026

மார்கழி 22ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

# மதுரோவுக்கு நடந்ததே அநுரவுக்கும் நடக்கும்!

## நாமல் ராஜபக்ச மிரட்டல்



**கொழும்பு, ஜனவரி 6**

**வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவுக்கு நடந்ததே, ஜனாதிபதி அநுரவுக்கும் நடக்கும் என்று ஸ்ரீலங்கா நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச மிரட்டியுள்ளார்.** »11



## அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை கண்டிக்காமை வெட்கக்கேடு!

### முன்னிலை சோசலிசக் கட்சி அரசுக்குக் கடும் கண்டனம்

கொழும்பு, ஜன. 6
வெனிசுலா மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை ஸ்ரீலங்கா அரசாங்கம் வெளிப்படையாகக் கண்டிக்காமை வெட்கக் கேடானது என்று முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவித்துள்ளது.
வெனிசுலா மீது தாக்குதல் நடத்தி, அதிபர் »11

### 2026ஆம் ஆண்டின்

## முதல் 5 நாள்களில் 793 பேருக்கு டெங்கு



கொழும்பு, ஜன. 6
2026ஆம் ஆண்டின் முதல் 5 நாள்களில் மாத்திரம் 793 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
நாட்டில் டெங்குத் தொற்று »11

## அரசை அசைப்பதற்கு எதிரணியால் முடியாது

### சுரவீர எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 6
ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தை அசைத்துப் பார்க்க முடியாது என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர »11

## ஐந்து வருடங்களுக்குள் சு.க. கட்டமைக்கப்படும்!

### சாமர சம்பத் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 6
சுதந்திரக்கட்சிக்கு மீண்டெழும் இயலுமை உள்ளது. எனவே, அடுத்த ஐந்து வருடங்களுக்குள் கட்சி நிச்சயம் கட்டியெழுப்பப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸாநாயக்க தெரிவித்தார். »11

### முன்னாள் அமைச்சர்

## ஜோன்ஸ்டனுக்கு விளக்கமறியல்!



கொழும்பு, ஜன. 6
முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட் »11





### திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம்

## குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் சொந்தப்பிணைகளில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 6
யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராகப் போராடியவர்கள் மீது பொலிஸார் பல்வேறு வழக்குகளைத் தொடர்ந்துள்ள நிலையில், அனைவரையும் சொந்தப் பிணைகளில் விடுவித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. »11

## அநுர அரசுக்கு அடிபணியேன்

### முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 6
தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அரசியற் பழிவாங்கலில் ஈடுபட்டு வருகின்றது என்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குற்றஞ்சாட்டியுள்ளார்.
அரச வளங்களை சட்டவி »11

## ஹெரோய்னுடன் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 6
யாழ்ப்பாணம் கொழும்புத்துறைப் பகுதியில், ஹெரோய்ன் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பிர »11

### நாட்டின் தென்கிழக்கில்

## வலுப்பெற்றது தாழமுக்கம் வடமாகாணத்தில் மழை!

யாழ்ப்பாணம், ஜன. 6
தென்மேற்கு வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென் கிழக்குப் பகுதியில் தற்போது காணப்படும் தாழமுக்கம் வலுப்பெற்றுள்ளது. இது வடக்குக்கு அருகாக நகர்ந்து தமிழகம் நோக்கிப் பயணிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக »11



## நெடுந்தீவில் பாம்பு தீண்டியவர் ஹெலியில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன. 6
நெடுந்தீவில் பாம்புக் கடிக்கு உள்ளான நபரொருவர் ஹெலிகொப்டர் ஊடாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அழைத்து »11

மக்கள் ம[illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 05.01.2026
சீட்டிழுப்பு இலக்கம் 4307
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 06 10 25 27
விசேட எழுத்து L

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 05.01.2026
சீட்டிழுப்பு இலக்கம் 1374
வெற்றி இலக்கினம் தனு
வெற்றி இலக்கங்கள் 09 32 41 56

**NLB ஜய**
திகதி 05.01.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0333
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 4 0 1 5

**மெகா பவர்**
திகதி 05.01.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2413
ஆங்கில எழுத்து W
சுப்பர் இலக்கம் 15
வெற்றி இலக்கங்கள் 15 28 61 74

**மஹஜன சம்பத**
திகதி 05.01.2026
சீட்டிழுப்பு இலக்கம் 6065
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 2 8 8 9 7 2

**தன நிதானய**
திகதி 05.01.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2095
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 15 20 43 59
விசேட எழுத்து W

**சுப தவசக்**
திகதி 05.01.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0181
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 02 25 57

# புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்திலும் மிகமோசமான கூறுகள் உள்ளடக்கம்!

## சமூக ஊடகப் பிரகடனத்துக்கான கூட்டிணைவு சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜன.6**

**பயங்கரவாதத் தடைச்சட்டம் நிராகரிக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்த பல்வேறு அடிப்படைக்கூறுகள், அதற்குப் பதிலீடாகப் புதிதாக வெளியிடப்பட்டுள்ள வரைவில் உள்வாங்கப்பட்டுள்ளன. ஜனநாயகக் கோட்பாடுகள் வலுவிழுப்பதைப் புறந்தள்ளிவிட்டு, தேசிய பாதுகாப்பை மாத்திரம் தனித்து முன்னிலைப் படுத்த முடியாது.**

எனவே இந்தப் புதியவரைவை அரசாங்கம் உடனடியாக மீளப் பெறவேண்டும் என சமூக ஊடகப் பிரகடனத்துக்கான கூட்டிணைவு வலியுறுத்தியுள்ளது.

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டவரைவானது, தற்போது நடைமுறையிலிருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்துடன் ஒப்பிடுகையில் அடையப்பட்டிருக்கும் மனித உரிமைகள் சார்ந்த பெரு வெற்றிபோல் காண்பிக்கப்படுகின்றது. அந்த பிம்பத்தின் விளைவாக நிர்வாக ரீதியான தடுத்துவைப்பு, இராணுவ அதிகாரங்கள், கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம் சார்ந்த குற்றங்கள் என்பன உள்ளடங்கலாக அவ்வரைவில் உள்வாங்கப்பட்டுள்ள மிகமோசமான அடிப்படைகள் பற்றிய தெளிவற்ற தன்மை நிலவுகின்றது.

ஜனநாயகக் கோட்பாடுகள் வலுவிழப்பதைப் புறந்தள்ளிவிட்டு, தேசிய பாதுகாப்பை மாத்திரம் தனித்து முன்னிலைப்படுத்த முடியாது. எனவே சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு ஏற்புடையவாறு புதிய சட்டத்தை உருவாக்குவது குறித்து சகல தரப்பினருடனும் பரந்துபட்ட கலந்துரையாடல்களை முன்னெடுக்குமாறும் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் என்று அந்தக் கூட்டிணைவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 05.01.2026 தினம் திங்கட்கிழமை
வெற்றி வாரம் 0773
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கம் 8 5 8 4 2 1

**Super Ball DLB**
திகதி 05.01.2026 தினம் திங்கட்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3039
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கம் 20 34 53 62

**சனிதா DLB**
திகதி 05.01.2026 தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கம் 34 49 64 77
வெற்றி வாரம் 5200

**SASIRI DLB**
திகதி 05.01.2026 தினம் திங்கட்கிழமை
வெற்றி வாரம் 0869
வெற்றி இலக்கம் 30 32 33

**லக்ன ராசி DLB**
திகதி 05.01.2026 தினம் திங்கட்கிழமை
ரிஷபம்
வெற்றி இலக்கம் 01 06 12 41
சீட்டிழுப்பு வாரம் 4751

**KAPRUKA DLB**
திகதி 05.01.2026 தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து G
சுப்பர் இலக்கம் 10
வெற்றி இலக்கம் 12 25 44 56
வெற்றி வாரம் 2215

**அத கோடிபதி DLB**
திகதி 05.01.2026 தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கம் 14 21 25 38
வெற்றி வாரம் 2865

# 3,498 கோடி ரூபா ஈ.பி.எவ். நிலுவை

கொழும்பு, ஜன.6

இலங்கையில் 2015ஆம் ஆண்டு முதல் தற்போதுவரை சுமார் 22 ஆயிரத்து 450 நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்தத் தவறியுள்ளன என்று நாடாளுமன்றத்தில் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. இவற்றின் மொத்த நிலுவைத் தொகை 3 ஆயிரத்து 498 கோடி ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1958ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட ஈ.பி.எவ். இலங்கையின் மிகப்பெரிய சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும். சட்டத்தின்படி, ஊழியர்கள் தங்கள் மாத வருமானத்தில் குறைந்த பட்சம் 8 வீதம் பங்களிக்கவேண்டும், அதேவேளை முதலாளிகள் 12 வீதம் பங்களிக்கவேண்டும்.

ஓய்வூதியக் காலத்துக்கான நிதிப் பாதுகாப்பு, வீட்டுக்கடன் பெறுவதற்கான உத்தரவாதம், மருத்துவச் செலவுகள் மற்றும் அவசரத் தேவைகளுக்காகப் பணத்தைத் திரும்பப் பெறும் வசதி என்பன இந்தத் திட்டத்தினூடாக வழங்கப்படுகின்றன. (ச-இ)

# இலாபமடையும் மின்சாரசபை; மின்கட்டண அதிகரிப்பு ஏன்?

## மின்பாவனையாளர் சங்கம் கேள்வி

மின்கட்டண அதிகரிப்புக்காக இலங்கை மின்சாரசபை முன்வைத்துள்ள பரிந்துரைகள் மற்றும் அதற்கான தரவுகளில் உண்மைத்தன்மை கிடையாது. மின்சாரசபை இலாபமடைகிறது. ஆகவே மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு அனுமதியளிக்கக்கூடாது என்று இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் மின்பாவனையாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

மின்கட்டணத்தைத் திருத்தம் செய்வதை மீள்பரிசீலனை செய்யும் 3 மாத காலத்தில் பிரதான நீர்மின்னுற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்நிலைகளுக்குக் கிடைக்கப் பெறும் மழைவீழ்ச்சி குறைந்தமை, இலங்கை மின்சாரசபையின் கடன், எரிபொருள் விலையின் மாற்றம், புதிய மின்சார சபைச் சட்டத்தின் பிரகாரம் சேவையில் இருந்து ஓய்வுப் பெற்ற சேவையாளர்களுக்கு செலுத்தப்பட்ட நட்டஈடு (ஆரம்ப செலவாக) உள்ளிட்ட காரணிகளால் ஆண்டின் முதற் காலாண்டில் மின்கட்டணத்தை 11.57 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை மின்சாரசபை இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் யோசனை முன்வைத்துள்ளது. மின்கட்டண அதிகரிப்புக்காக இலங்கை மின்சார சபை முன்வைத்துள்ள பரிந்துரைகள் மற்றும் அதற்கான தரவுகளில் உண்மைத்தன்மை கிடையாது. ஆகவே மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு அனுமதியளிக்கக்கூடாது என்றும் மின்பாவனையாளர் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)



# ஒரே நாளில் ஏழு விமானங்கள்:

## யாழ். விமான நிலையம் சாதனை

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஒரே நாளில் வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது. கடந்த சனிக்கிழமை ஒரே நாளில் 2 சர்வதேச இண்டிகோ விமானங்களும், சினமன் ஏர் மற்றும் டிபி ஏவியேஷன் நிறுவனங்களால் 5 உள்நாட்டு வணிகவிமானங்களும் இயக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் யாழ்ப்பாணம் ச[illegible]வதேச விமானநிலைய வரலாற்றில் ஒரே நாளில் ஏழு விமானங்கள் இயக்கப்பட்ட முதல் நாள் என்ற சாதனை கடந்த [illegible] [illegible]து. [illegible]

# ஈ.பி.எவ். நிலுவை வைத்துள்ள நிறுவனங்கள்மீது நடவடிக்கை

கொழும்பு, ஜன.6




இலங்கையில் ஊழியர் சேமலாப நிதிப் (EPF) பங்களிப்புகளை முறையாகச் செலுத்தத் தவறிய நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. இதுதொடர்பில் தொழில் அமைச்சின் செயலாளர் எஸ்.எம். பியதிஸ்ஸ தெரிவித்துள்ளதாவது-

இனிவரும் காலங்களில் ஊழியர்கள் தொழிலாளர் துறையின் அதிகாரபூர்வ இணையத்தளம் ஊடாக நேரடியாக முறைப்பாடுகளைப் பதிவு செய்யலாம். முறைப்பாடு அளிப்பவர்களின் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து உடனுக்குடன் குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும்.


அதற்கமைய முதலில் நிறுவனங்களுக்கு முறையான அறிவித்தல் அனுப்பப்படும். பின்னர் நிறுவனப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி நிலுவையை மீட்க முயற்சி எடுக்கப்படும். இதற்கும் இணங்காத நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, அபராதத்துடன் கூடிய நிலுவைத்தொகை வசூலிக்கப்படும் -என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 500 பொலிஸார் மீது பாய்ந்தது ஒழுக்காற்று



கொழும்பு, ஜன.6
போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டு களுடன் தொடர்புடைய 500 பொலிஸ் அதிகாரிகள்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார். குற்றஞ்சாட்டப்பட்ட வர்களில் ஒரு குழுவினரைப் பணிநீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள அவர், சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய அதிகாரிகளே இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுவதை அனுமதிக்கமுடியாது என்றும்குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## கைப்பற்றப்பட்ட கஞ்சா பருத்தித்துறையில் அழிப்பு

யாழ்ப்பாணம், ஜன.6
பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தினால் 600 கிலோ கேரளக் கஞ்சா போதைப்பொருள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறைப் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டு சான்றுப்பொருள்களாக நீதிமன்ற நடவடிக்கைக்குட்படுத்தப்பட்ட கேரளக் கஞ்சா போதைப்பொருளே அழிக்கப்பட்டுள்ளது.
வலிக்கண்டிப் பகுதியிலுள்ள பருத்தித்துறை நகரசபைக்குச் சொந்தமான இடத்தில், பருத்தித்துறை நீதவான் இந்துஜா சிவலிங்கம் முன்னிலையில் பருத்தித்துறைப் பொலிஸார் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்களால் குறித்த போதைப்பொருள் அழிக்கப்பட்டது. (ஏ-41-100)

## 2 கிலோ ஐஸ்ஸுடன் பெண் கைது

கொழும்பு,ஜன.6
பேலியகொட மற்றும் கிராண்ட்பாஸ் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளில் ஐஸ் ரக போதைப்பொருளுடன் பெண் உட்பட நான்கு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 2 கிலோவுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. பேலியகொட, இக்கினிகஹபில்லேவ பகுதியில் கொழும்பு மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதேவேளை, கிராண்ட்பாஸ் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 820 கிராம் ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## தங்கத்தைக் கடத்திவந்த விமான ஊழியர் கைது!

கொழும்பு, ஜன.6
4 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய தங்கநகைகள் மற்றும் தங்கபிஸ்கட்டுகளைச் சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டுவந்த தனியார் விமான நிறுவனத்தின் பெண் ஊழியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கட்டுநாயக்க விமானநிலைய சுங்க அதிகாரிகளால், சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் கொழும்புப் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய விமானப் பணிப்பெண் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கட்டுநாயக்க விமானநிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

## மதுபோதையில் சாரத்தியம் இ.போ.ச. சாரதி கைது

இலங்கை போக்குவரத்துச்சபை பேருந்தை, மது போதையில் செலுத்திச் சென்ற சாரதி, அல்லைப்பிட்டிப் பகுதியில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். இலங்கை போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான ஊர்காவற்றுறை - யாழ்ப்பாணம் வழித்தடத்தில் சேவையை முன்னெடுக்கும் 777 இலக்க பேருந்து, நேற்றுமுன்தினம் மாலை அதிகவேகத்துடன் பயணித்துள்ளது. அதை அவதானித்த ஊர்காவற்றுறைப் போக்குவரத்துப் பொறுப்பதிகாரி சமன் குமார தலைமையிலான பொலிஸ் அணியினர் அல்லைப்பிட்டிப் பகுதியில் வைத்துப் பேருந்தை வழிமறித்துச் சோதனையிட்டனர்.
சோதனையின்போது பேருந்து சாரதியிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாதநிலையில், அவர் மதுபோதையில் இருந்துள்ளார். அதையடுத்து பொலிஸார் சாரதியைக் கைதுசெய்துள்ளனர். (க-66)

## ஆயுள்வேத துறையில் மைல்கல்

இலங்கை ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் தனது வரலாற்றில் மிக அதிகப்படியான வருடாந்த வருவாயை கடந்த 2025ஆம் ஆண்டில் ஈட்டிப் புதிய மைல்கல்லை எட்டியுள்ளது. இந்தக் கூட்டுத்தாபனம் கடந்தாண்டில் 168 மில்லியன் ரூபா வருவாயைப் பதிவு செய்துள்ளது. இது நிறுவனத்தின் வரலாற்றில் மிக உயர்ந்த வருடாந்த வருமானமாகும்.
இந்தச் சாதனையைக் கொண்டாடும்வகையில் கூட்டுத்தாபன வளாகத்தில் ஏழு புதிய தயாரிப்புகள் உத்தியோகபூர்வமாக அறிமுகம்செய்யப்பட்டன. சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் தலைமையில் இந்த [illegible] (ச-இ)




## நல்லதைக் குழப்பிற அரசியல்

வைக்கோல் பட்டடை நாய் மாதிரி இஞ்ச ஏதுமொரு நல்லவேலை நடக்கப்போகுதெண்டா உடன அதுக்க புகுந்து குழப்பிறதுக்கெண்டே கொஞ்சப்பேர் இருக்கினம். சிலருக்கு அப்பிடிக் குழப்பிறதில சில அரசியல் ஆதாயங்கள் இருக்கும். ஆனால் கனபேருக்குத் தாங்கள் ஏன் குழப்பிறம், எதுக்குக் குழப்பிறம் எண்டே தெரியாமல், கண்ணை மூடிக்கொண்டு எல்லாத்தையும் குழப்பியடிச்சுக் கொண்டு இருப்பினம். அப்பிடி ஒரு திட்டம் தான் பூநகரி முக்கொம்பனில வர இருக்கிற சோலர்த் திட்டம்.

உந்தச் சோலர்த் திட்டத்தைக் கொழும்பில இருக்கிற கொம்பனிதான் செய்யுது. படையப்பா படத்தில 'மாப்பிள்ளை அவர்தான் ஆனால் சேர்ட் என்ர' எண்டு ரஜினி சொல்லுற மாதிரி, திட்டம்தான் அந்தக் கொழும்புக் கொம்பனியின்ர ஆனால் அதுக்குக் காசுபோட்டு, செய்ய வெளிக்கிட்டது ஒஸ்ரேலியாவைச் சேர்ந்த முதலீட்டாளர்மார்தான். சும்மா வந்துபோற வெயிலைக் கறண்டாக்கி, காசாக்கினால் நட்டமொண்டும் இல்லைத்தானே. காற்றாலையும் அப்பிடியான புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கொண்ட திட்டம் தான். ஆனாலும் அதுக்குச் சத்தம் கேக்குது, பறவையள் சாகுது, மீன் குறையுது, மழை குறையுது எண்டு நொட்டையள் சொல்லி, அதையும் கொண்டு வராமல் செய்யிறம். சோலரில அப்பிடியான நொட்டையள் சொல்லேலாது. அதோட இந்தத் திட்டத்தைக் கொண்டுவர வெளிக்கிட்ட அந்தக் கொழும்புக் கொம்பனி, இந்தச் சோலர் கறண்டை வித்துவாற லாபத்தில, ஒரு பங்கை முக்கொம்பன் ஏரியாவின்ர அபிவிருத்திக்குக் குடுக்கவும் ரெடியா இருந்தது. ரணில் ஆட்சியில இருக்கேக்க, அந்தக் கொம்பனிக்குச் சோலர் போடுறதுக்கு அனுமதி கிடைச்சு வேலையள் தொடங்கிற நேரம் ஆட்சி மாறிட்டுது.

திசைகாட்டி அரசாங்கம் ஆட்சியில வந்ததும், வராததுமா ரணில் அனுமதி குடுத்த கன திட்டங்களை இல்லாமல் செய்யிறதிலைதான் மும்முரம் காட்டினவை. நேரடியா உந்தத் திட்டங்களைக் கிடப்பில போடாமல், வேற வகையில அழுத்தம் குடுத்து நிப்பாட்டுறதுதான் திசைகாட்டியின்ர பிளான். அதால ரணில் அரசாங்கம் சொன்னதைவிடக் குறைவான விலைக்குத்தான் சோலர் கறண்டை வாங்குவம் எண்டு திசைகாட்டிக்காரர் சொல்லியிருக்கினம். அந்த விலையை வைச்சு கூட்டிக் கழிச்சால் பிறகு குத்துவிளக்கில கணக்குப் பாக்கிற அளவுக்கு நட்டம் தான் வருமெண்டதால காசுபோட ஓமெண்டு சொன்ன ஒஸ்ரேலியா முதலீட்டாளர்மார் பிச்சை வேண்டாம் நாயைப்பிடி எண்டமாதிரி ஓடிட்டினம். எண்டாலும் அந்தக் கொழும்புக் கொம்பனி உந்தத் திட்டத்துக்காக ஓடியாடித் திரிஞ்சு வேற ஒரு முதலீட்டாளரைக் கெஞ்சிக் கூத்தாடி, ஓமெண்டப் பண்ணி இப்ப திரும்பவும் அதைத் தொடங்க நினைச்சினம். ஆனால் இப்ப அந்தத் திட்டத்துக்கு எம்.பி. ஒருத்தர் லஞ்சம் வாங்கினவர் எண்ட புரளியைக் கிளப்பி, அந்தப் புரளியை உண்மை எண்டு நம்பவைக்கிறதுக்காக வழக்கொண்டும் சோடிச்சு முறைப்பாடும் குடுபட்டிருக்குது. ஆனால் அப்பிடி ஆரும் லஞ்சம் வாங்கவுமில்லை, குடுக்கவுமில்லை எண்டது முறைப்பாடு குடுத்தவருக்கே நல்லாத்தெரியும். ஆனால் அப்பிடி இல்லாத பொல்லாத விசயங்களுக்கு முறைப்பாடு குடுத்து மூக்குடைபடுகிறது தான் அந்த முறைப்பாட்டாளரின்ர முழுநேர வேலை. இப்பிடி முதலும் கனபேருக்கு எதிரா பொய்முறைப்பாடுகள் செய்து, இப்ப அவையள் நட்டைஈடு கேட்டு 'கேஸ்' போட்டிருக்கினம். இதுக்குப் பின்னால சில அரசியல்வாதியளும் நிக்கினமாம். 'இந்தத் திட்டம் வந்தால் அந்த எம்.பி.க்கு நல்ல பேர் வந்திடும். அதால எப்பிடியும் குழப்பியடிக்கோணும்' எண்டு அதே கட்சியின்ர பதில் பதவியில இருக்கிறவர் தன்ர அல்லக்கையளுக்கு 'வைன்' குடுத்து ஆட வைக்கிறார் எண்டும் கதை அடிபடுகுது. இவையின்ர அரசியல் சடுகுடுவால உந்தத் திட்டத்தால முக்கொம்பனுக்குக் கிடைக்கவேண்டிய வேலைவாய்ப்பு, அபிவிருத்தி எல்லாம் நாசமாகுது கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆங்கிலப் புத்தாண்டு ராசிபலன்



## சிம்மம்

நீதி, நேர்மைக்குக் கட்டுப்பட்டு, சொன்ன சொல் தவறாத நீங்கள், உண்மையை உரக்கச் சொல்வதில் யாருக்கும் தலை வணங்கமாட்டீர்கள்.

உங்கள் ராசிக்கு 10ஆம் வீட்டில் சந்திரன் இருக்கும்போது இந்த ஆங்கிலப் புத்தாண்டு பிறப்பதால் தலைமைப் பதவி தேடிவரும். ஊர்ப் பொதுக்காரியங்களை முன்னின்று நடத்துவீர்கள். தாழ்வு மனப்பான்மை நீங்கித் தன்னம்பிக்கை துளிர்விடும். இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். தம்பதிக்குள் அந்நியோன்யம் பிறக்கும். குழந்தைவரம் வேண்டியவர்களுக்கு வாரிசு உருவாகும். விரயச்செலவுகளைக் கட்டுப்படுத்துவது நல்லது. மகளுக்குத் திருமணத்தை முடிப்பீர்கள்.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் இலாப வீட்டில் நிற்பதால் வீடு, மனை வாங்குவீர்கள். வாகன வசதி பெருகும். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். பணப்புழக்கம் அதிகரிக்கும். 1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் ராசிக்கு 12ஆம் வீட்டுக்குச் செல்வதால் எல்லா விஷயங்களிலும் நிதானம் அவசியம். சகோதர சகோதரிகளிடம் இருந்துவந்த மனஸ்தாபங்கள் விலகும். வெளிமாநிலம் மற்றும் வெளிநாட்டில் வேலை கிடைக்கும்.

14.10.2026 முதல் 31.12.2026 வரை ஜென்ம குருவாக நுழைவதால் அடிக்கடி மருத்துவச்செலவுகள் வந்துபோகும். யோகா, தியானம் என்று மனதைப் பக்குவப்படுத்துங்கள்.

12.1.2026 முதல் 5.2.2026 வரை 6ஆம் வீட்டில் சுக்கிரன் மறைவதால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எலக்ட்ரிக்கல், எலக்ரானிக்ஸ் சாதனங்கள் பழுதாகும். கணவன் - மனைவிக்குள் வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

2.4.2026 முதல் 11.5.2026 வரை 8ஆம் வீட்டில் செவ்வாய் மறைவதால், அலைச்சல்கள் ஏற்படும். சகோதரர்களை பகைத்துக்கொள்ளாதீர்.

இந்த வருடம் முழுவதுமாக அஷ்டமத்து சனி தொடர்வதால் கூட இருந்தே சிலர் குழி பறிப்பார்கள். இரகசியங்களை யாரிடமும் பகிர்ந்துகொள்ள வேண்டாம்.

டிச.4ஆம் திகதி வரை உங்கள் ராசிக்குள் கேது நிற்பதால் எதிர்காலத்தைப் பற்றிய பயம் வரும். முடிவெடுப்பதில் தடுமாற்றம் ஏற்படும். 7ஆம் வீட்டில் ராகு நிற்பதால் தம்பதிக்குள் விட்டுக்கொடுத்துப் போகவும். வீண் விமர்சனங்களுக்கு ஆளாவீர்கள். டிச. 5ஆம் திகதி முதல் கேது 12ஆம் வீட்டுக்குள் செல்வதால் விரயச் செலவுகள் அதிகரிக்கும். தூக்கம் குறையும். 6ஆம் வீட்டில் ராகு நிற்பதால் வழக்கில் வெற்றியுண்டு. கடன் பிரச்சினை குறையும். எதிரிகள் நண்பர்களாவார்கள்.

இல்லத்தரசிகளுக்கு துணிமணிகள் சேரும். உங்களின் தரம் உயரும். கன்னிப்பெண்களுக்கு பட்டப்படிப்பில் வெற்றியுண்டு. கூடிய விரைவில் கெட்டிமேளச் சப்தம் கேட்கும். மாணவ மாணவிகளுக்கு சோம்பல் விலகும். பெற்றோரின் பேச்சுக்கு மதிப்பளியுங்கள்.

வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்றுத் தீர்க்க விளம்பர யுக்திகளைக் கையாளுவீர்கள். அனுபவம் வாய்ந்த புதுவேலையாட்கள் அமைவார்கள். இரும்பு, கெமிக்கல், ரியல் எஸ்டேட், மருந்து வகைகளால் திடீர் இலாபம் அதிகரிக்கும். கூட்டுத்தொழிலில் பங்குதாரர் களிடம் விட்டுக்கொடுத்துப்போவது நல்லது.

உங்கள் ராசிக்கு 10ஆவது வீட்டில் இந்தாண்டு பிறப்பதால் உத்தியோகத்தில் உங்கள் தகுதி உயரும். பதவி உயர்வு, சம்பள உயர்வு எல்லாம் தேடிவரும். பிரச்சினை தந்த மேலதிகாரி வேறிடத்துக்கு மாற்றப்படுவார். சக ஊழியர்கள் மதிப்பார்கள். கணினித் துறையினருக்குப் பணிச்சுமை அதிகரிக்கும், அதற்கு தகுந்தாற்போல் சம்பளமும் உயரும்.

கலைத்துறையினருக்கு சம்பளப்பாக்கி கைக்கு வரும். வீண் வதந்திகளில் சிக்கிக்கொள்ளாதீர்கள். கிடைக்கும் வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தப் பாருங்கள்.

மொத்தத்தில் இந்த ஆங்கிலப் புத்தாண்டு, தன் கையே தனக்குதவி என்பதை உணரவைப்பதுடன், வாழ்க்கையில் புதிய அனுபவத்தையும் கற்றுத்தருவதாக அமையும்.

**பரிகாரம்: ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை அணிவித்து வணங்குங்கள். தடைகள் விலகிச் சாதிப்பீர்கள். நிம்மதி பிறக்கும்.**

**அம்மன் திருமண சேவை**

எம்மிடம் அனைத்து மத இனத்தவருக்கும் அவரவருக்கு ஏற்ப வரன்களை எம்மிடம் குறுகிய காலத்தில் அமைத்திட நாடவும்.

**இடம்: யாழ்ப்பாணம் நகர்**

தொடர்புகளுக்கு: 077 0050 344
074 0891 995

(CS 31203) A

## சொற்பொழிவு

சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்தத் திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் தெல்லிப்பழை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் நிகழ்வில் பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், சைவப்புலவர் பிரசங்கபூஷணம் செ.த.குமரனின் "நாரைக்கு முத்தி கொடுத்த படலம்" எனும் பொருளில் சொற்பொழிவும் இடம் பெறும். (எ-41)

## பெற்றோல்...

றோலின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள்களின் விலைகளில் பல்வேறு மாற்றங்களை நேற்று நடைமுறைப்படுத்தியுள்ளது. இதன் அடிப்படையிலேயே, 95 ஒக்ரேன் பெற்றோலின் விலை 7 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, புதிய விலையாக 340 ரூபா நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை 277 ரூபாவாக இருந்த ஒட்டோ டீசலின் விலை 2 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, அதன் புதிய விலையாக 279 ரூபா நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, 318 ரூபாவாக இருந்த சுப்பர் டீசலின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, அதன் புதிய விலையாக 323 ரூபா நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் 2 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, அதன் புதிய விலையாக 182 ரூபா நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஒக்ரேன் 92 ரக பெற்றோலின் விலையில் எந்த மாற்றமும் இடம்பெறவில்லை. அதன்விலை 294 ரூபாவாகவே பேணப்படவுள்ளது.

**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை**

**இயக்கச்சி சந்தைக் கடைத் தொகுதியிலுள்ள கடை இல் ஆந-09 கடையை 01.02.2026 ஆம் திகதி தொடக்கம் 31.12.2026 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் -2026**

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 06.01.2026 தொடக்கம் 19.01.2026 வரை(அலுவலக நேரம் )
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 20.01.2026 பிற்பகல் 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 20.01.2026 பிற்பகல் 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

இயக்கச்சி சந்தைத்தொகுதி கடைக்கான கேள்வி அட்டவணை.

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | PS - 09 | 34,800.00 | 5,000.00 | 2,000.00 |

நிபந்தனைகள்:-

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 20.01.2026 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
05. அரசஉத்தியோகத்தர்கள் கடைகளைப் பெற்றுக்கொள்ளமுடியாது.
06. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையின் 1/3 பங்கு பணத்தை முழுமையாக அன்றைய தினமே செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். மிகுதித் தொகையினை 07 பகுதியாகப் பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10மூ தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.
07. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
09. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
10. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.சுப்பிரமணியம் சுரேன், 06.01.2026.
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## புதிய கல்விச்சீர்திருத்தம் வரமா? சாபமா?

இலங்கையின் கல்வித்துறையில் பல தசாப்தங்களாக நிலவிவரும் பரீட்சை மையப்பார்வையை அகற்றி, மாணவர்களின் ஆளுமை மற்றும் நடைமுறைத் திறன்களை மையப்படுத்திய கல்விச்சீர்திருத்தத்தை அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டுவரவுள்ளது. பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் இந்தத் துணிச்சலான அறிவிப்பு, பாடப் புத்தகங்களை மனப்பாடம் செய்து பரீட்சை மண்டபங்களில் வாந்தி எடுக்கும் தற்போதைய 'கிளிப்பிள்ளை' கல்விமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஒரு வரலாற்றுத் திருப்புமுனையாக அமையுமென பார்க்கப்படுகிறது. 2026ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து தரம் 1 மற்றும் தரம் 6 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த மாற்றம், வெறும் பாடத்திட்ட மாற்றம் மட்டுமல்லாது, ஒரு நாட்டின் மனிதவளக் கட்டமைப்பையே நவீனமயமாக்கும் முயற்சியாகும். இதற்காக சுமார் 25 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருப்பது கல்விக்கு அரசாங்கம் வழங்கும் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துவதோடு, அதில் பெரும் பகுதி பாடசாலைகளின் உள்கட்டமைப்புக்காகச் செலவிடப்படுவது ஒரு ஆரோக்கியமான தொடக்கமாகும்.

இந்தச் சீர்திருத்தத்தின் பிரதான சாதகமான அம்சம், 'செயல்வழிக்கற்றல்' முறைக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையாகும். ஒரு கருவியின் பாகங்களை கரும் பலகையில் பார்த்துப் படிப்பதைவிட, அதனைக் கைகளால் தொட்டு இயக்கிப்பார்க்கும் அனுபவம் மாணவர்களின் சிந்தனைத் திறனை விசாலமாக்கும். இது உலகளாவிய வேலைச்சந்தையில் இலங்கை மாணவர்களுக்கான வாய்ப்புகளை அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும், இலட்சக்கணக்கான ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதும், மதிப்பீட்டு முறைகளில் நவீனமயமாக்கல் அறிமுகப்படுத்தப்படுவதும் கல்வித் துறையில் நிலவும் தேக்கநிலையை உடைக்கும். குறிப்பாக, பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் விழிப்புணர்வுத் திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம், சமூகத்தில் வேரூன்றியிருக்கும் 'ரியூன் கலாசாரம்' மற்றும் பரீட்சைப் பயத்தைக் குறைக்க முடியும் என்பது இந்தத்திட்டத்தின் மற்றுமொரு பலமாகும்.

ஆயினும், இத்தகைய சடுதியான மாற்றங்கள் களயதார்த்தத்தில் எதிர்கொள்ளும் சவால்களையும் குறைத்து மதிப்பிட முடியாது. இலங்கையின் பல கிராமப்புறப் பாடசாலைகளில் இன்னும் அடிப்படை வசதிகளே அற்ற சூழல் நிலவுகையில், நவீனத் தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட கற்றல் செயலட்டை (Modules) முறையைச் சமமாக நடைமுறைப்படுத்துவது பெரும் சவாலாகும். நகர்ப்புற மற்றும் வசதி குறைந்த கிராமப்புற பாடசாலைகளுக்கு இடையே நிலவும் பாரிய இடைவெளி, இந்தச்சீர்திருத்தத்தின் பலன்களை அனைவருக்கும் சமமாகக் கொண்டு சேர்ப்பதில் சிக்கல்களை ஏற்படுத்தலாம். அத்துடன், குறுகிய காலத்திற்குள் இத்தகைய திடீர்மாற்றத்திற்குப் பழக்கப்படாத மாணவர்களும் பெற்றோரும் ஒருவிதமான உளவியல் அழுத்தத்திற்கும் உள்ளாகக் கூடும்.

இந்தச் சீர்திருத்தத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு வெறும் நிதி ஒதுக்கீடு மட்டும் போதாது; அது முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்தும் கண்காணிப்புப் பொறிமுறை அவசியமாகும். பரீட்சைகளைத் தாண்டிய ஒரு கல்வி முறையைச் சமூகம் ஏற்றுக்கொள்ளவேண்டுமாயின், பல்கலைக்கழக அனுமதி மற்றும் வேலைவாய்ப்புத் துறைகளிலும் அதற்கேற்ற மாற்றங்களைக் கொண்டுவரப்படவேண்டும். கல்வி என்பது அரசியல் இலாபங்களுக்கான கருவியாக மாறாமல், தேசத்தின் எதிர்கால சந்ததியினரை உலகத் தரம் வாய்ந்தவர்களாக மாற்றும் இலட்சியமாக இருக்க வேண்டும். திட்டமிட்டபடி 2026இல் இந்தச்சீர்திருத்தம் முழுமைபெறுமாயின், அது இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு இடப்படும் பலமான அடித்தளமாக அமையும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com







### பொய்யாமொழி

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்**

**பொருள்:** மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்திய தூயவனின் உண்மையான ஒழுக்கமுடைய நெறியைப் பின்பற்றி நிற்பவர்களின் புகழ்வாழ்வு நிலையானதாக அமையும்.




## மாணவர்களுக்கு வழிகாட்ட 'டிஜிற்றல் செயலணி'



**கொழும்பு, ஜன.6**

**மாணவர்களுக்கான பாதுகாப்பான இணையவழி வழிகாட்டல்களைத் தீர்மானிக்க 'டிஜிற்றல் செயலணி' ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தொழில்நுட்பத்திலிருந்து குழந்தைகளை முழுமையாகப் பிரித்துவிடமுடியாது என்பதால், அவர்களுக்குப் பொருத்தமான இணையச் செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப்படும். இதற்கான வழிகாட்டல்கள் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் வெளியிடப்படும்.

அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட இணையத்தளங்கள் மற்றும் இணைப்புகளை மட்டுமே மாணவர்கள் அணுகும்வகையில் இது அமையும் அத்துடன் புதிய சீர்திருத்தங்களின்கீழ், சுயகற்றல் தொகுதிகள் ஊக்குவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## தங்கத்தின் விலையில் மாற்றம்

கொழும்பு, ஜன.6

தங்கத்தின் விலை நேற்று அதிகரித்துள்ளது. கடந்த 2ஆம் திகதி ஒரு பவுண் 24 கரட் தங்கம் 3 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாவாக இருந்தநிலையில் நேற்று 3 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது. ஒரு பவுண் 24 கரட் தங்கம், 3 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாவாகவும், ஒரு பவுண் 22 கரட் தங்கம் 3 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாவாகவும் நேற்று விற்பனை செய்யப்பட்டது. (எ-இ)



## திருட்டு

புதுவருடக் கொண்டாட்டத்துக்காக, உறவினர் வீட்டுக்குச் சென்றவர்களின் வீட்டில், ஜன்னலை உடைத்து பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் பளை இந்திராபுரத்தில் நடந்துள்ளது. கிளிநொச்சியிலுள்ள உறவினர் வீட்டுக்குச் சென்று வீடு திரும்பிய போது, திருட்டு இடம்பெற்றுள்ளதை வீட்டார் தெரிந்துகொண்டனர்.

வீட்டிலிருந்த நிவாரணப் பொருள்கள், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கற்றல் உபகரணங்கள் மற்றும் மின்சாதனப் பொருள்கள் என்பன திருடப்பட்டுள்ளன என்று வீட்டார் தெரிவித்துள்ளனர். (க-9)

### ரிஷாத்திடம் வாக்குமூலம்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியூதினுக்கு விடுக்கப்பட்ட அழைப்பாணையின்படி, நேற்றுக்காலை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையானார். வாக்குமூலம் ஒன்றைப் பெறுவதற்காகவே அவர் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## உணவுச்சட்ட நடைமுறை ஜூலைக்கு ஒத்திவைப்பு!

உணவுச்சட்டத்தின் 32ஆவது பிரிவின் கீழுள்ள சில விதிமுறைகள் நடைமுறைத் திகதியை ஒத்திவைக்க சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி வரை ஒத்திவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.'

உணவு லேபல் இடல் மற்றும் விளம்பரப்படுத்தல் விதிமுறைகள், திரவ உணவுகளில் சீனி அளவுக்கான நிறக்குறியீட்டு விதிமுறைகள், உணவுக்கான உப்பு அயடின் கலத்தல் தொடர்பான விதிமுறைகள் மற்றும் ட்ரான்ஸ் கொழுப்புத் தொடர்பான விதிமுறைகளே எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

நாளை

புதன்கிழமை - மார்கழி 23

07.01.2026

சுபநேரம் : 05.02 - 06.32

ராகுகாலம் : 12.32 - 02.02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான செயற்பாடுகளுக்கு அரசாங்கம் இடமளிக்காது!



## அமைச்சர் விஜித உறுதி

கொழும்பு, ஜன.6

தரம் ஆறு பாடத்திட்டத்தில் ஏற்பட்ட பிழை தொடர்பில் விசாரணைகள் நடத்திய குழுவின் அறிக்கைக்கமைய அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கும். எந்தவித தவறான செயற்பாடுகளுக்கும் அரசாங்கம் இடமளிக்காது என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையின் புதிய கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகளை சில குழுக்கள் அரசியற்கட்சிகள் அரசியல் கோணங்களில் கருத்துகளை முன்வைத்து, இது பிரதமரின் தனிப்பட்ட சிந்தனைகளைக் கொண்டுள்ளதாக முன்னெடுக்கும் பிரசாரங்களை அரசாங்கம் என்ற வகையில் நாம் கண்டிக்கிறோம்.

இது புதிய கல்விச் சீர்திருத்த அரசாங்கத்தின் கூட்டுமுயற்சியாகும். நாட்டின் பிள்ளைகளின் எதிர்காலத்தை நோக்காகக்கொண்டு அரசாங்கம் முன்னெடுக்கும் கொள்கை ரீதியிலான திட்டமாகும். தரம் ஆறு பாடத்திட்டத்தில் ஏற்பட்ட பிழை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன் அறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதுதொடர்பில் அவசரமாக நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச)

### டித்வா புயல் பாதிப்பு

## இயங்காத நிலையில் 100 பாடசாலைகள்

கொழும்பு, ஜன.6

'டித்வா' சூறாவளியால் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளம் காரணமாக சுமார் 100 பாடசாலைகள் பயன்படுத்தமுடியாத நிலையில் உள்ளன என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. குறித்த பாடசாலைகளில் பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளதுடன், சில பாடசாலைகள் தொடர்ந்தும், பாதிக்கப்பட்ட மக்களைத் தங்கவைத்துள்ள முகாம்களாக செயற்படுகின்றன.

குறித்த பாடசாலைகளில் கல்விகற்ற மாணவர்கள் அருகிலுள்ள பாடசாலைகளுக்குச் செல்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனினும், அருகிலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்வதில் ஏதேனும் சிக்கல்கள் காணப்படுமாயின், அதுகுறித்தும் ஆராய்வதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெள தெரிவித்துள்ளார். (ச-இ)

## இந்தியாவுடனான ஒப்பந்தம் சுகாதாரத்துறைக்கு ஆபத்து

### ராஜித சேனரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜன.6

நாட்டில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் இந்தியாவுடன் செய்துகொண்டுள்ள சுகாதாரம் தொடர்பான திருட்டு ஒப்பந்தம் நாட்டுக்குப் பெரும் ஆபத்தாகும் என முன்னாள் அமைச்சர் ராஜித சேனரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சுகாதாரம் தொடர்பில் அரசாங்கம் இந்தியாவுடன் செய்துகொண்டுள்ள திருட்டு ஒப்பந்தம் மிகவும் பயங்கரமானதாகும். இந்த ஒப்பந்தத்தை நாங்கள் கண்டுபிடித்து வெளிப்படுத்தியிருக்கிறோம்.

இந்திய மருந்துகளில் நல்ல மருந்துகளும் இருக்கின்றன. தரம் குறைந்த மருந்துகளும் இருக்கின்றன. அதனாலே இந்திய பாமகோபியாவை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எதிர்காலத்தில் மருந்து ஏற்றுமதியில் போட்டித்தன்மை ஏற்படுவதைத் தடுக்கவே இந்தியா எங்களுடன் இந்த உடன்படிக்கைக்கு வந்துள்ளது. உலக நாடுகளால் பாராட்டப்பட்டும் பல நாடுகளுக்கு முன்மாதிரியாகவும் இருந்த எமது சுகாதாரத்துறை, இன்று நாளுக்குநாள் சீரழிந்து செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அதனால் உலகில் மிகவும் மோசமான சுகாதார சேவை இருக்கும் 40 நாடுகளில் இலங்கையும் உள்வாங்கப்பட்டிருக்கிறது - என்றார். (ச-இ)

## ட்ரம்பைத் தோற்கடிக்க போராடுவார் வாசுதேவ

கொழும்பு, ஜன.6

ட்ரம்பின் நடவடிக்கையைத் தோற்கடிக்க வேண்டும். அவருக்கு எதிராக இடதுசாரி சக்திகளுடன் இணைந்து போராட்டம் நடத்தப்படும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வெனிசுலாமீது அமெரிக்கா கோரத்தாக்குதலை நடத்தியுள்ளது. அந்த நாட்டு ஜனாதிபதி மற்றும் அவரது பாரியார் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கல் யுகத்தில் நடப்பது போன்ற செயலையே ட்ரம்ப் செய்துள்ளார். ஆனாலும் வெனிசுலா அடிபணியாது. இதற்கு முன்னரும் அந்த நாட்டுத் தலைவர் ஒருவரைப் பிடித்துச் சென்றனர். ஆனால் மக்கள் நாட்டுக்காகப் போராடினார்கள். நாட்டுத் தலைவரைப் பாதுகாத்தார்கள். எனவே, தேசப்பற்றுள்ள வெனிசுலா மக்கள் வீதிக்கு இறங்குவார்கள். ட்ரம்பின் பதவிக் காலத்தில் இதுவே கடைசி நடவடிக்கையாகக் கூட இருக்கலாம்.

ஏனெனில் அவருக்கு எதிராக எதிர்ப்பு கிளம்பி வருகின்றது-என்றார். (எ-44)





## பாண்டியன் உணவகத்துக்கு பச்சிலைப்பள்ளியில் அடிக்கல்

கிளிநொச்சி, ஜன.6

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை வளாகத்தில் பாண்டியன் என்ற பெயருடன் அமைக்கப்படவுள்ள பாரம்பரிய உணவகத்துக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது. தவிசாளர் சுப்பிர மணியம் சுரேன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், சாம்பசிவம் சுதர்சன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் ,பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் பொது அமைப்பு சார்ந்தோர் கலந்து கொண்டனர். பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தில் உள்ள காற்றாலை மின் உற்பத்தி மூலம், வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கு வழங்கும் சமூக பொறுப்பு நிதியிலிருந்து 19.9 மில்லியன் ரூபா செலவில் இந்த உணவகம் அமைக்கப்படவுள்ளது. (க-113)



## பெரும்பான்மை பலமிருந்தாலும் அரசின் ஆயுள் மக்களது கையில்

### ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஜன.6

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப்பலம் இருந்தாலும், அரசாங்கத்தின் ஆயுள் மக்களின் கைகளுக்குள்ளேயே உள்ளது என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு எம்மால் முடியாது. அதனை மக்கள் தான் தீர்மானிப்பர். அரசாங்கத்தின் ஆயுள் காலம் 5 வருடங்கள் எனக் கூறப்பட்டாலும், கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சியைக் கவிழ்த்து, அதற்கு முன்னரே அவர்களை மக்கள் வீட்டுக்கு அனுப்பினர். எனவே, அரசாங்கத்தின் ஆயுளென்பது மக்களின் கைகளிலேயே உள்ளது. அதேவேளை, வெனிசுலா மீதான அமெரிக்காவின் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். வெனிசுலாவை யார் ஆளவேண்டும் என்பதை அந்த நாட்டுமக்களே தீர்மானிக்கவேண்டும்.

மாறாக அமெரிக்கா அல்ல. அமெரிக்காவின் நடவடிக்கை முற்றிலும் தவறு. மற்றுமொரு நாட்டை ஆக்கிரமிக்கும் உரிமை கிடையாது. ட்ரம்பின் நடவடிக்கை முழு உலகுக்கும் அச்சுறுத்தலாகும்-என்றார். (க-44)

## டெங்கு நோயாளர்கள் 2 நாள்களில் 581 பதிவு

கொழும்பு, ஜன.6

இந்த வருடத்தின் முதல் இரண்டு நாள்களில் டெங்கு நோயளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் இந்த இரண்டு நாள்களில் மாத்திரம் 581 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக மருத்துவர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கடந்த காலங்களில் நிலவிய மழையுடனான வானிலையால் டெங்குக் குடம்பிகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு சிறுமியின் மரணம்; நிபுணர் குழுவால் 3 பரிந்துரைகள்

முல்லைத்தீவு, ஜன.6

**முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியில் 12 வயதுச் சிறுமி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணையை நடத்திய நிபுணர்கள் குழு, தனது இடைக்கால அறிக்கையை 3 முக்கியமான பரிந்துரைகளுடன் சமர்ப்பித்துள்ளது.**

கடந்த மாதம் 21ஆம் திகதி உணவு ஒவ்வாமை காரணமாக முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 12 வயதுச் சிறுமி, சிகிச்சைப் பயனின்றி உயிரிழந்தார். மருத்துவமனையின் கவனக்குறைவே மரணத்துக்குக் காரணம் என உறவினர்கள் குற்றஞ்சாட்டியதையடுத்து வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் விசேட நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்தக்குழு விசாரணை மேற்கொண்டு சமர்ப்பித்த இடைக்கால அறிக்கையில், சம்பவத்தின்போது அவசர சிகிச்சைப் பிரிவில் கடமையில் இருந்த தாதிய உத்தியோகத்தரை உடனடியாக சாதாரண நோயாளர் விடுதிக்கு இடமாற்றம் செய்யவேண்டும்.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மருத்துவரைத் தனியாகப் பணியாற்ற அனுமதிக்காமல், மற்றுமொரு சிரேஷ்ட அதிகாரியின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் செயற்பட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மருத்துவமனை அறிக்கைகளில் ஏதேனும் குளறுபடிகள் அல்லது திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் எழும் பட்சத்தில், அது குறித்து உடனடியாக பொலிஸில் முறைப்பாடு செய்யவேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிந்துரைகளை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரசேவைகள் பணிப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் பத்திரன தெரிவித்துள்ளார்.

அத்துடன் சம்பவம் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கை ஒரு வார காலத்துக்குள் சமர்ப்பிக்கப்படும். அந்த அறிக்கை கிடைத்த பின்னரே ஒழுக்காற்று விசாரணைகள் குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)



## பேசாலையில் மூவியரசர் விழா

மன்னார், ஜன.6

பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயத்தில், மூவியரசர் பெருவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக இடம்பெற்றது.

இந்தத் தினத்தில் ஆலய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் புனித வெற்றி அன்னையின் திருச்சுரூபம் வருடத்தில் ஒருமுறை இறக்கப்படும். அன்னையை சிம்மாசனத்திலிருந்து இறக்கி, விஷேடமாக அன்னையிடம் வேண்டுதல் கேட்பர். குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு, அன்னையின் கையில் இருக்கும் பாலக இயேசு அருட்பணியாளர்களால் அவர்களின் கையில் கொடுக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படும் சடங்கும் இடம்பெற்றது. இந்தச் சடங்கைத் தொடர்ந்து அன்னையின் திருச்செரூபம் பேசாலைக் கிராமத்துக்குள் பவனியாக எடுத்துச்செல்லப்பட்டு, கடற்கரைப் பகுதி ஊடாகக் கொண்டுவரப்பட்டு அன்னையின் பாதத்தைக் கடல் நீரால் கழுவி, கடற்றொழில் சிறக்க அதனைக் கடல் நீருடன் கலக்கும் சடங்கும், திருச்செரூப ஆசீரும் இடம்பெற்றது. (க-60)

## திஸ்ஸ விகாரையை ஒப்படைத்தால் 1.2 ஏக்கர் காணியை வழங்கத்தயார்

### நயினாதீவு விகாராதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.6

தையிட்டி திஸ்ஸ விகாரை நிர்வாகத்தைத் தன்னிடம் ஒப்படைத்தால், காணி உரிமையாளர்களுக்கு, தனது பொறுப்பிலுள்ள திஸ்ஸ விகாரைக் காணியிலிருந்து 1.2 ஏக்கர் நிலத்தை மாற்றீடாக வழங்கத் தயார் என்று நயினாதீவு விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

நயினாதீவு விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர், யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனை யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் திடீரெனச் சந்தித்துக் கலந்துரையாடினார். அந்தச் சந்திப்பில் அவர் இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

தையிட்டி விகாரையைச் சூழவுள்ள காணிகள் அனைத்தும் தனியாருக்குச் சொந்தமானவை. விகாரை அமைந்துள்ள சுமார் 1.2 ஏக்கர் நிலத்தைத் தவிர, ஏனைய அனைத்துக் காணிகளும் அவற்றின் உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்கவேண்டும் என்று விகாராதிபதி வலியுறுத்தினார். காணி விவகாரம் தொடர்பில் அரசாங்கம் மற்றும் காணி அமைச்சு எடுத்துவரும் சட்டபூர்வமான நடவடிக்கைகள் தொடர்பில் யாழ்.மாவட்டச் செயலர், விகாராதிபதிக்கு விளக்கமளித்தார். பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் இந்த விவகாரம் கையாளப்படும் என்று விகாராதிபதி தெரிவித்துள்ளார். (க-66)

## கன்னியா வெங்நீரூற்றில் அகழ்வு சட்டத்தரணி சுமந்திரன் ஆராய்வு


திருகோணமலை, ஜன.6

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் ஆலயம் இருந்த பகுதியில் தொல்லியல் திணைக்களத்தால் அகழ்வுப்பணி மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் கடந்த சில தினங்களாக இடம்பெற்றுவரும் நிலையில் அங்கு ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்று களநிலைவரங்களை ஆராய்ந்தார்.

ஆலயத்தின் அறங்காவலரும் தர்மகர்த்தாவுமாகிய திருமதி கோகிலரமணியுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டார். அந்தக் காணியில் விகாரை அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதை நிறுத்தக்கோரி காணியின் சட்டபூர்வ உரிமையாளரும், பிள்ளையார் ஆலயத்தின் அறங்காவலருமான கோகிலரமணியால் திருகோணமலை மேல் நீதிமன்றில் 29.07.2019 அன்று வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் வழக்காளி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி வாதாடியிருந்தார். (ச-50)





## கடும் கடற்கொந்தளிப்பால் மூர்க்கம் கடற்கரை சிதைவு

யாழ்ப்பாணம், ஜன.6

கடும் கடற்கொந்தளிப்புக் காரணமாக பருத்தித்துறை மூர்க்கம் உல்லாசக் கடற்கரை கொங்றீட் வீதி உள்ளிட்ட கட்டுமானங்கள் முற்றாக அழிவடைந்துள்ளன. டித்வா புயல் காரணமாக கடற்கரைப் பகுதியில் கடலரிப்பு ஏற்பட்டிருந்தது. பிரதான வீதியை இணைக்கும் கொங்றீட் வீதியும் கடலரிப்பால் பாதிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து மணல் மூடைகள், கற்கள் கொண்டு தற்காலிகமாகப் பாதுகாக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் கடுமையான கடற்கொந்தளிப்பால், கொங்றீட் வீதிக்கு கீழாக உள்ள மணல் அரிக்கப்பட்டு, வீதி தாழிறங்கியுள்ளது. சுற்றுலாவிகள் இருப்பதற்காக அமைக்கப்பட்ட வட்ட வடிவ இருக்கைகள், நடைபாதை உள்ளிட்ட கட்டுமானங்கள் அனைத்தும் கடலரிப்பால் முற்றாக அழிவடைந்துள்ளன.

வார இறுதி மற்றும் விடுமுறை நாள்களில் உள்ளூர் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து ஏராளமான சுற்றுலாவிகள் இங்கு வந்துசெல்கின்றனர். அத்துடன் வருடா வருடம் தைப்பொங்கல் தினத்தன்று ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி பட்டம் ஏற்றி கொண்டாடி மகிழும் இடமாகவும் திகழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-100)

## வெனிசுலா மீதான ஆக்கிரமிப்பு தங்கம், வெள்ளி விலை எகிறும்

கொழும்பு, ஜன.6

2026ஆம் ஆண்டு புவிசார் பதற்றத்தை தோற்றுவித்துள்ள வெனிசுலா மீதான அமெரிக்க தாக்குதல் காரணமாக எதிர்வரும் நாள்களில் கச்சா எண்ணெய், தங்கம் மற்றும் வெள்ளி விலைகளில் பாரிய மாற்றம் ஏற்படும் என பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ளனர்.

உலகின் மிகப்பெரிய வெள்ளி ஏற்றுமதியாளர்களான பெரு மற்றும் சாட் நாடுகள் தங்கள் வெள்ளி ஏற்றுமதிக்கு பயன்படுத்தும் கடல்வழிப் பாதையை அமெரிக்கா - வெனிசுலா நெருக்கடி பாதித்துள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் நாள்களில் கச்சா எண்ணெய், தங்கம் மற்றும் வெள்ளி விலைகளில் மிகப்பெரும் மாற்றம் ஏற்படும். இந்தத் தாக்குதலால் பிராந்தியத்தில் புவிசார் அரசியல் பதற்றம் அதிகரித்து, அடிப்படை உலோகங்கள், தங்கம், வெள்ளி, கச்சா எண்ணெய் உள்ளிட்ட எரிசக்திப் பொருள்கள் போன்றவற்றுக்கு நிச்சயமற்ற நிலை உருவாகும் என்பதுடன், விலைகளும் உயரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரியில்


# 20 மில்லியன் ரூபா செலவில் இரு அபிவிருத்தித் திட்டங்கள்!

யாழ்ப்பாணம், ஜன.6

**சாவகச்சேரி நகரசபையால் சுற்றுலாச் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில், பொதுமக்களின் நலன்கருதிய இரண்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக நகரசபைத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ் தெரிவித்துள்ளார்.**

அதன்படி கடந்த 2013ஆம் ஆண்டு அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக சாவகச்சேரிப் பொதுச்சந்தையில் விற்பனை அலகுக் கொட்டகைகள் அமைக்கப்பட்டன. எனினும் அதனுடன் இணைந்து கட்டப்பட்ட கட்டணக் கழிப்பறைக் கட்டம் நீண்டகாலமாக புனரமைப்புக்காகக் காத்திருந்தது. அதற்கமைய தற்போது 10 மில்லியன் ரூபா செலவில் மாற்றுத்திறனாளிகளும் பயன்படுத்தக்கூடிய வகையில் இந்தக் கட்டடம் முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை நுணாவில் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள நகரப் பூங்காவில் இயன்மருத்துவப் பிரிவு நோயாளர்களுக்கு ஆறு வகை மருத்துவச் சாதனங்கள் பொருத்தக்கூடிய கட்டடம் மற்றும் பூங்காவைச் சுற்றிய நடைபாதை என்பனவும் மற்றொரு திட்டமாக 10 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருவதாக நகரசபைத் தவிசாளர் தெரிவித்தார். (ச-41-9)



வடமராட்சியில்

## சி.வெங்காயம், புகையிலை செய்கைகள் ஆரம்பம்!


யாழ்ப்பாணம்.ஜன.6

பெரும்போகச் செய்கையை முன்னிட்டு வடமராட்சிப் பகுதியில் சின்ன வெங்காயம் மற்றும் புகையிலைச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

டித்வா புயல் மற்றும் மழை வெள்ளப் பாதிப்புகள் தற்போது நீங்கியதையடுத்து விவசாயிகள் இந்தப் பயிர்ச்செய்கையில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

பருத்தித்துறை, குடத்தனை, தம்பசிட்டி, இன்பர்சிட்டி, வியாபாரி மூலை, மந்திகை, இலகடி, மாலைசந்தை, நெல்லியடி, கரவெட்டி, வதிரி, உடுப்பிட்டி உள்ளிட்ட வடமராட்சிப் பிரதேசத்துக்குட்பட்ட பல இடங்களில் இவற்றைப் பயிரிடுவதற்கு விவசாய நிலங்களைப் பண்படுத்தும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். சில இடங்களில் புகையிலைக் கன்றுகள் நடுகை செய்யப்பட்டுவருவதுடன் வெங்காய விதைப்பும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ச-100)

விவசாய அமைச்சின்கீழ் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் அனுசரணையுடன் வாயுத்துப்பாக்கிப் பயன்பாடு தொடர்பான ஆய்வுக் கருத்தமர்வு தென்மராட்சி பிரதேச செயலர் எவ்.சீ. சத்தியசோதி தலைமையில் சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-9)



வியாபாரியால் அவதூறு;

## ரூ.2 கோடி நஷ்டஈடுகோரும் பரு.நகரசபைச் செயலாளர்!

யாழ்ப்பாணம், ஜன.6

ஊழல் குற்றச்சாட்டை தன்மீது முன்வைத்துப் போராட்டமொன்றில் கோஷம் எழுப்பியமைக்காக மரக்கறி வியாபாரி ஒருவருக்கு எதிராக 2 கோடி ரூபா நஷ்டஈடு கோரி பருத்தித்துறை நகரசபைச் செயலாளரால் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மரக்கறிச் சந்தை இடமாற்ற விவகாரம் தொடர்பில், பருத்தித்துறை வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் போராட்டம் கடந்த ஒக்ரோபர் மாதம் நடத்தப்பட்டது. இதில் பங்கேற்ற வியாபாரி ஒருவரால், எனது நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் ஊழல் கோஷமிடப்பட்டமை முகநூல் மூலம் பரவலாகப் பகிரப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டு பொய்யானது. எவ்வித ஆதாரமும் மற்றது. களங்கம் ஏற்படுத்தும் வகையில் போலிக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே இந்தச் செயற்பாட்டுக்கு நஷ்டஈடு செலுத்தவேண்டும். இல்லையேல் வழக்குத் தொடரப்படும் என்றும் அவர் சட்டத்தரணியூடாக நோட்டீஸ் அனுப்பியுள்ளார். (க-100)

தென்மராட்சிப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஒளிவிழா பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ச-41-9)





தென்மராட்சி கைதடி கோயிலாக்கண்டி வேலம்பிராய் அருள்மிகு கண்ணகி அம்பாள் ஆலயத்தில் திருவெம்பாவை மார்கழி ஆருத்ரா தரிசனம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. திருப்பள்ளி எழுச்சியுடன் ஆரம்பித்து அபிஷேகப் பூஜை, வசந்தமண்டபப் பூஜை, திருவூஞ்சல் என்பன நடைபெற்று சிவகாமி அம்பாள் சமேத ஆனந்த நடராஜப் பெருமானின் உள்வீதியுலா இடம்பெற்றது. (ச-41-159)



## கிராம அலுவலர் அலுவலகம் கூமாங்குளத்தில் திறப்பு!

வவுனியா, ஜன.6

புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கூமாங்குளம் கிராம அலுவலர் அலுவலகம் கடந்த வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்ட கூட்டுறவுப் பிரதி அமைச்சர் உட்பட அதிதிகள் அலுவலக கட்டடத்தைத் திறந்துவைத்தனர். கிராம அலுவலர் என்.ஸ்ரீதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், பிரதேசசபையின் தவிசாளர் பா.பாலேந்திரன் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள், கிராமமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-110)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06.01.2026 செவ்வாய்க்கிழமை

# மாகாணசபைத் தேர்தலில்அரசாங்கம் விரட்டப்படும்!

## கூறுகிறது பெரமுன

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வீட்டுக்கு அனுப்பப்படும். மாகாணசபைத் தேர்தலில் அதற்குரிய ஆரம்பப்புள்ளி வைக்கப்படும். ஜனநாயக வழியில் நாட்டைப் பொறுப்பேற்பதற்கு நாமல் ராஜபக்ச தயாராகவே இருக்கின்றார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தெரிவித்துள்ளது. மொட்டுக் கட்சியின் தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே முன்னாள் இராஜாங்க அமைச்சர் சானக வக்கும்புர மேற்கண்டவாறு அறிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி வலுவடைந்துவருகின்றது. முடிந்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்தி தமது பலத்தைக் காட்டுமாறு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு சவால் விடுக்கின்றோம். மாகாணசபைத் தேர்தல் உட்பட அடுத்து நடக்கும் தேர்தல்களில் நாமல் ராஜபக்ச தலைமையில் மொட்டுக் கட்சி வெற்றிநடைபோடும். தேசிய மக்கள் சக்தியை வீட்டுக்கு அனுப்புவதற்குரிய அரசியல் தலைமைத்துவத்தை நாம் வழங்குவோம். கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே அரசாங்கம் வீட்டுக்கு அனுப்பப்படும் - என்றார். (ச-44)


## நாஹா மருத்துவ நிலையம்

நீரிழிவினால் வரும் புரையோடும் கால் எலும்பு புண்கள், கால் நரம்பு செயலிழப்பு, சிறு நீரக பாதிப்பு விசேட மருந்தியல், கை, கால் செயலிழப்பு, மூட்டுக்கள் தேய்வு, அல்சர் பூரண சுகம் பெறல்.

இடம் : வங்கி முன் லேன், சாந்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீடு), மானிப்பாய்.

தொடர்புகளுக்கு:- 077 321 2740

(CS/60384) J-1

## வேலையாட்கள் தேவை

கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்
- காசாளர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.)

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:077 386 6250

## பணிநிலை வேண்டுகை

யாழ் வணிகர் கழக அலுவலகத்திற்கு நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. புரிந்துணர்வுடன் இணைந்து செயற்படக்கூடிய அரச நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற கணணி, ஆங்கில அறிவு, தொடர்பாடல் திறன் மற்றும் மும்மொழி ஆற்றல் உடையவராகவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சுயவிபரங்களுடனான விண்ணப்பத்தினை நற்சான்றுப்படுத்தி 21.01.2026 ஆம் திகதிக்கு முன்னர் யாழ் வணிகர் கழக அலுவலகத்திற்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

முகவரி : செயலாளர்
யாழ் வணிகர் கழகம்,
இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

Whatsapp : 076 575 4993

(CR/46841) J-1


## 32ஆம் ஆண்டு நினைவலைகள்



வருடங்கள் பல சென்றாலும் உங்கள் நினைவுகளுடன் என்றும்
வணிகர்கள்

மண்ணில் 22.08.1937 — விண்ணில் 06.01.1994

அமரர்
**சங்கரப்பிள்ளை நமசிவாயம்**
(முன்னாள் தலைவர், சாவகச்சேரி கைத்தொழில், வணிகர் மன்றம் முன்னாள் உரிமையாளர், அம்பிகா மருந்தகம், சாவகச்சேரி.)

மன்ற சேவைக்கென வந்து அமரத்துவம் அடைந்த அமரரின் நினைவு நாளும், நினைவு கூட்டமும் இன்று (06.01.2026) செவ்வாய்க்கிழமை மு.ப. 09.30 மணிக்கு மன்ற அலுவலகத்தில் உள்ள அமரரின் நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அங்கத்தவர் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டிக்கொள்கின்றோம்.

(CS 39206) A

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 04 . 1944 — மறைவு 04 . 01 . 2026

### யோகநாதன் தவமணிதேவி
(மல்லிகா)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகநாதன் தவமணிதேவி (மல்லிகா) அவர்கள் 04.01.2026 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், யோகநாதன் அவர்களின் அன்பு மனைவியும், ரவிச்சந்திரன் (கனடா), நிர்மலா (கனடா), வத்சலா, காலஞ்சென்ற ரவிசங்கர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், நளினி (கனடா), விஜயாநந்தன் (கனடா), ரவீந்திரன் (கொக்குவில்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தவலிங்கம், சாந்தம், குணம், பஞ்சு, கலா, சிவலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், உதயசங்கர், நிலக்ஷன், நிறோஷன் - கவினா, நிவேந்தன் - லக்ஷனா, தீபிகா - செந்தூரன், ராகவேந்தினி - யோகசீலன், ஸ்ரீராகவி - ஆதவன், ஸ்ரீகஜன், கஜரூபன் ஆகியோரின் பேர்த்தியும், விகானா, ஆதினி, நிலா, ஆதித்தியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

CCTMS ஒழுங்கை
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

தகவல்: குடும்பத்தினர்.
075 471 8477

(CS 60383) E

## 17ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நல்லையா தவகுலசிங்கம்

பாரினிலே பலரும் போற்ற வாழ்ந்த

பெருமைக்குரிய தந்தையே !

எங்களை விட்டுப் பிரிந்து

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்


உங்கள் நினைவுகள் மாறாது.

அன்னை மடியில் 25.02.1947 — ஆண்டவன் அடியில் 16.12.2008

குடும்பத்தினர்

(CS/31202) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 04 . 1947 — மறைவு 01 . 01 . 2026

### கனகரத்தினம் நகுலேந்திரன்
(சுதா பேக்கரி உரிமையாளர்)

சீனியர் லேன், கலட்டியை பிறப்பிடமாகவும், கேணியடி கொக்குவில் மேற்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் நகுலேந்திரன் அவர்கள் கடந்த (01.01.2026) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - கண்ணம்மா தம்பதியரின் அன்பு புத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - புனிதவதி தம்பதியரின் அன்பு மருமகனும், பராசக்தியின் அன்புக் கணவரும், சுதர்சன் (ஜேர்மனி), சுதர்சினி குடும்பம் (இந்தியா), சுபாஜினி (லண்டன்), சுஜந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரமேஸ்வரி, சிவகுமாரன், நிதர்சனா ஆகியோரின் மாமனாரும், றோசினி, சிபின்சன், தனிஸ், சர்மிளா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, தைடியலக்சுமி மற்றும் துரைராசா, லோகேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும், தவலோகராசாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2026) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: மருமகன்
க.சிவகுமார் (சிவம்)
077 262 7807
075 554 3025

கேணியடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(CS/60388) J-1


## வேலையாட்கள் தேவை

கொக்குவில், ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளில் இயங்கும் மிக்சர் நிறுவனம் ஒன்றிற்கு பொதியிடல் வேலைக்கு பெண்பணியாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:-
077 459 8247

(CS/60387) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மகிழ்ச்சிதரும் நாள். வாழ்க்கைத்துணை வழி உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். தந்தைவழி உறவினர்களால் வீண்செலவுகள் ஏற்படும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கும் திடீர்ச்செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும்.

**துலாம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். முக்கியமான முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக் கும்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளி லும் கூடுதல் கவனம் தேவை. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும்

**தனுசு:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். நண்பர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மகரம்:** மகிழ்ச்சிதரும் நாள். குடும்பத்தில் உங்கள் முயற்சிகளுக்குத் தேவையான ஆதரவு கிடைப்பதில் பிரச்சினை எதுவும் இருக்காது.

**கும்பம்:** சிலருக்குத் தந்தையுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் அவருடன் அனுசரணையாக நடந்து கொள்ள முயற்சி செய்யவும்.

**மீனம்:** இன்று எதிலும் பொறுமை அவசியம். புதியமுயற்சிகள் இழுபறியாகும். பிள்ளைகளின் தேவையை நிறைவேற்ற சிறிது அலைய வேண்டியிருக்கும்.

## நாட்டின் தலைவரைக் கடத்துவது
# சர்வதேச பயங்கரவாதம்
## கிம் கண்டனம்

கொழும்பு, ஜன.6
ஒரு நாட்டின் தலைவரைக் கடத்துவது சர்வதேச பயங்கரவாதம். அமெரிக்கா உலக நாடுகளுக்குப் பாடம் சொல்லும் தகுதியை இழந்துவிட்டது என்று வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், அமெரிக்கா தனது ஏகாதிபத்திய அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி ஒரு நாட்டின் இறையாண்மையைப் பறித்துள்ளது. இது ஒரு காட்டுமிராண்டித்தனமான செயல். தன்னைப் பாதுகாத்துக் கொள்ள அணு ஆயுதங்கள் இல்லாத நாடுகளுக்கு இது ஒரு எச்சரிக்கை பாடம். ஆனால், வடகொரியா அப்படிப் பட்டது அல்ல. எங்களது நட்பு நாடுகளுக்கு ஆபத்து ஏற்பட்டால், நாங்கள் வேடிக்கை பார்க்கமாட்டோம்.

ட்ரம்பின் இந்தச் செயல் உலகை மற்றுமொரு பேரழிவை நோக்கித் தள்ளுகிறது. மூன்றாம் உலகப்போர் தொடங்க அமெரிக்கா விரும்பினால், அதை எதிர்கொள்ள நாங்கள் தயார். எங்களது ஏவுகணைகள் சரியான இலக்கை நோக்கித் தயாராக உள்ளன- என்றார்.



இதேவேளை வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியை சிறைபிடித்தமைக்கு பல நாடுகளும் அதன் தலைவர்களும், அமைப்புகளும் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ச-இ)



சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் யாழ். கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு 5 இலட்சம் ரூபா நிதியில் புதிய குடிநீர்ச் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டு மாணவர்களின் பாவனைக்காகக் நேற்றுத் திங்கட்கிழமை கையளிக்கப்பட்டது. (ச-இ)

# புதிய மோ.சைக்கிளில் பயிற்சி; மின்கம்பத்துடன் மோதிப் பலி!

புதிய மோட்டார் சைக்கிளை வாங்கிய மகிழ்ச்சியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் கோரவிபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் அஹுங்கல்ல பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.


மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியைவிட்டு விலகி, அருகில் இருந்த கம்பம் ஒன்றில் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. 18 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞர் கடந்த மூன்று நாள்களுக்கு முன்பே இந்த மோட்டார் சைக்கிளை வாங்கியுள்ளார். அந்தப் புதிய மோட்டார் சைக்கிளை ஓட்டிப்பழகச் சென்றபோதே இந்த விபத்து நேர்ந்துள்ளது. (ச-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 07 . 1937

மறைவு 05 . 01 . 2026



### கனகசபை மகேஸ்வரி

மாவத்தை வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை மகேஸ்வரி அவர்கள் நேற்று (05.01.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு புதல்வியும், கனகசபையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தேவராசா, ஞானேஸ்வரி மற்றும் புஸ்பராசமணி, லலிதா, வரதராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற விக்னேஸ்வரி, இரத்தினசிங்கம் மற்றும் தனபாலசிங்கம், யோகராசா, யோகபிரகாசவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், அரவிந்தன், அனுரதன், வசிகரன், துவாரகன், சொருபிகா ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற நவயுகன் மற்றும் சுதர்சினி, நவநீதன், கேதாரன், சிவதாரன், விவேகதாரன், புருஷோத், காலஞ்சென்ற கீதன் மற்றும் யசித்திரா, வானதி ஆகியோரின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2026) செவ்வாய்க்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாவத்தை வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 679 5361

(CS 31207) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுரோவுக்கு...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் புத்தாண்டுப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் நாமல் ராஜபக்சவும் கலந்து கொண்டார். இதன்பின்னர் ஊடகங்க ளுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே, 'வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவுக்கு நடந்ததே ஸ்ரீலங்கா ஜனாதிபதி அநுரவுக்கும் நடக்கும்' எனக் கூறியுள்ளார்.

எமது நாட்டின் கொள்கைகளை நாங் களே தீர்மானிக்க வேண்டும். வேறு நாடுகளின் தேவைக்கு ஏற்ப அர சாங்கக் கொள்கைகள் வகுக்கப்படக் கூடாது. அவ்வாறு செயற்பட்டால், வெனிசுலாவுக்கு நடந்தது தான் எமது நாட்டுக்கும் நடக்கும் என்பதை நினை வில் கொள்ளவேண்டும் என்றும் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் உள்ளவர்கள் மதம் மற் றும் சம்பிரதாயங்கள் இல்லாமல் ஏதோ ஒரு வழியில் செல்பவர்களாக உள்ள னர். இது மிகவும் ஆபத்தான போக்கு. அரச அச்சகத்தில் எத்தகைய செயற்பா டுகள் இடம்பெறுகின்றன என்று தெரி யாதவர்களுக்கு எவ்வாறு நாட்டு மக்க ளின் பிரச்சினைகள் தெரியவரும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச மேலும் கூறியுள்ளார். (அ-ம-44)

## ஐந்து...

சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பா ளராக சாமர சம்பத் தஸநாயக்க நிய மிக்கப்பட்டுள்ளார். கட்சித் தலைமை கத்தில் கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கையி லேயே, எதிர்வரும் ஐந்து வருடங்களுக் குள் சுதந்திரக்கட்சி மீண்டும் கட்டியெ ழுப்பப்படும் என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

இன்றைய ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்திகூட விழுந்துதான் எழுந் தது. 3 நாடாளுமன்ற உறுப்பினர்க ளாக இருந்த அவர்கள் 159 நாடாளு மன்ற உறுப்பினர்களாக மாறுவதற்கு பல வருடங்கள் எடுத்தன. எனவே, சுதந்திரக் கட்சியும் நிச்சயம் மீண்டெழும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க மேலும் தெரிவித் துள்ளார். (அ-ம-44)

## முதல்...

தீவிரம்பெற்று வருகின்றது. இந்த வரு டத்தின் முதல் 5 நாள்களில் மாத்திரம் 793 தொற்றாளர்கள் அவதானிக்கப் பட்டுள்ளனர். கடந்த வருடம் 51 ஆயி ரத்து 438 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டது. அவர்களில் 26 பேர் உயிரி ழந்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் கணிசமானவர்கள் மேல் மாகாணத் தைச் சேர்ந்தவர்கள் - என்றுள்ளது. (அ-ம)

## ஜோன்ஸ்டனுக்கு...

டுள்ளது. சதொச வாகனத்தை தவறா கப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் அவரது இளையமகன் ஆகியோர் நேற் றுக் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலை யிலேயே, எதிர்வரும் 9ஆம் திகதிவரை அவர்களை மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-44)

## அநுர...

ரோதமாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டு முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கும், அவரது மக னுக்கும் எதிராக முன்வைக்கப்பட்டுள் ளது. இந்த விவகாரத்தில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மகன் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜோன்ஸ்டன் தலைமறைவாக இருந்த நிலையில், அவருக்கு எதிராகப் பிடி யாணை பிறப்பிக்க நடவடிக்கை எடுக் கப்பட்டது. இதையடுத்து, அவர் நேற்று நிதிக் குற்ற விசாரணைப் பிரிவில் முன் னிலையாகி வாக்குமூலம் வழங்கினார். இதற்கு முன்னதாக ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே, அநுர அர சாங்கம் அரசியற் பழிவாங்கலில் ஈடுப டுவதாகக் கூறியுள்ளார்.

பத்து வருடங்களுக்கு முன்னைய வழக் கையே தற்போது விசாரித்து வருகின்ற னர். இந்த விடயத்தில் விசாரணை நடத்த வேண்டிய அவசியம் தொடர்பில் அரசாங்கம்தான் தெளிவுபடுத்த வேண் டும். எனது முழுக்குடும்பத்தையும் சிறையிடுவதற்கு முயற்சிக்கின்றனர். இத்தகைய மிரட்டல்களால் என்னை அடிபணிய வைக்க முடியாது என்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் குறிப்பிட்டுள் ளார். (அ-ம-44)

## அரசை...

தெரிவித்துள்ளார். பிரதமர் ஹரிணி யின் நடவடிக்கைகள் காரணமாக நாட் டின் கல்விக் கட்டமைப்பு சீர்குலைந்துள் ளது என்றும், ஆதலால் அவர் பதவி விலக வேண்டும் எனவும் எதிர்க்கட்சி கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வரு கின்றன. இவ்வாறான நிலையிலேயே, ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தை அசைத்துப் பார்க்க முடி யாது. அரசாங்கத்தைக் கவிழ்க்கும் எதிரணிகளின் முயற்சி தோல்வியடைந் துள்ளது என தேவானந்த சுரவீர கூறி யுள்ளார்.

மாணவர்களுக்குத் தீங்கு விளைவிக் கும் வகையில் கல்வி மறுசீரமைப்பு இடம்பெறாது. நாட்டு மக்களால் வழங் கப்பட்ட ஆணை எத்தகையது என்பதை நாங்கள் புரிந்துள்ளோம். அதற்கேற் பவே நாங்கள் செயற்படுவோம். நாட் டுக்கு பொருத்தமான கல்வியை உரு வாக்குவதற்கு அனைவரும் ஒத்து ழைப்பு வழங்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர தெரிவித்துள்ளார்.

கல்வி மறுசீரமைப்பு விடயத்தில் பிரத மரை இலக்கு வைத்து போலித் தகவல் களை பரப்புவதற்கு சிலர் முற்படுகின்ற னர். ஆளுங்கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தவும் முயல்கின்றனர். இந்த முயற்சிகள் எவையும் வெற்றியளிக் காது என்று நாடாளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர மேலும் கூறியுள் ளார். (அ-ம-44)

## அமெரிக்காவின்...

நிக்கோலஸ் மதுரோவை அமெரிக்கா கைது செய்தமையைக் கண்டித்து, அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக முன்னிலை சோசலிசக் கட்சி நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர் கள் தெரிவித்ததாவது:-

எண்ணெய் வளம் மீதான பேராசையா லேயே அமெரிக்கா இந்த ஆக்கிர மிப்பை மேற்கொண்டுள்ளது. ஈராக், ஈரான், லிபியா, காஸா என எல்லா இடங்களிலும் ஆக்கிரமிப்பு நடக்கின் றது. ஆனால் எவற்றையும் தடுத்து நிறுத்தும் நிலையில் ஐக்கிய நாடுகள் சபை இல்லை.

இந்த ஆக்கிரமிப்புத் தவறு எனத் தெரிந் தும், இலங்கை அரசாங்கம் மௌன மாக உள்ளது. இது வெட்கப்பட வேண் டிய விடயம். இலங்கை அரசாங்கத்தின் மௌனத்துக்கு அமெரிக்காவுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள்தான் காரணமாக இருக்குமோ என நாங்கள் சந்தேகப்படுகின்றோம். அமெரிக்கா வின் அடாவடிக்கு எதிராக உலக நாடு கள் குரலெழுப்ப வேண்டும் என்றனர். இந்தப் போராட்டத்தை முன்னிட்டு, அமெரிக்கத் தூதரகத்துக்குப் பெரும் பாதுகாப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (அ-ம-44)

## பாம்பு...

வரப்பட்டார். நெடுந்தீவு எட்டாம் வட்டா ரத்தைச் சேர்ந்த நபரொருவர் நேற்று பாம்புக் கடிக்கு இலக்கானார். கால நிலை சீரின்மை காரணமாக கடல்வழிப் பயணத்தை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டது. இதையடுத்தே அவர் ஹெலிகொப்டர் ஊடாக மீட்கப் பட்டு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார்.

எதிர்வரும் சில தினங்களுக்கு சீரற்ற காலநிலையே தொடரும் என்பதால், மீட்புப்பணிகளில் உள்ள சிரமங்களைக் கருத்திற்கொண்டு நெடுந்தீவு வாழ் பொதுமக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் என அதிகாரிகள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர். (அ-ம-26)

## ஹெரோய்னுடன்...

திப் பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங் கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவின ருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டது.

சந்தேகநபர்களிடம் இருந்து 4 கிராம் 90 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட் டுள்ளது. அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. (அ-ம-27)

## குற்றஞ்சாட்டப்பட்ட...

திஸ்ஸ விகாரைக்கு எதிராக அமைதி வழியில் போராடிய வலிகாமம் கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், வேலன் சுவாமிகள், காணி உரிமையாளர் சாருஜன் உள்ளிட்ட ஐந்து பேர் கடந்த மாதம் 21ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதி மன்றப்பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் நேற்று நீதிமன்றத்தில் முன் னிலையாக வேண்டும் என அழைப் பாணை அனுப்பப்பட்டது. அவர்க ளுக்கு மேலதிகமாக, வலிகாமம் வடக்கு தவிசாளர் சோ. சுகிர்தன், போராட்டத்தில் பங்குகொண்ட பிரதேசசபை உறுப்பி னர்கள், போராட்டத்தில் பங்கெடுக்கும் செயற்பாட்டாளர்கள் எனப் பலரையும் உள்ளடக்கி நேற்று குற்றப்பத்திரம் தாக் கல் செய்யப்பட்டது. அத்துடன் தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பான முன் னைய வழக்குகளும் நேற்று விசார ணைக்கு எடுக்கப்பட்டன.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பாக, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்தி ரன், சிரேஷ்ட சட்டத்தரணி நல்லதம்பி சிறிகாந்தா, சிரேஷ்ட சட்டத்தரணி குமா ரவடிவேல் குருபரன் தலைமையில் 13 சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்.

நீதிமன்ற கட்டளையை போராட்டக்காரர் கள் மீறினர் எனவும், இன நல்லிணக் கத்துக்கு பங்கம் ஏற்படுத்தினார்கள் எனவும் பொலிஸார் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

ஜனாதிபதிசட்டத்தரணிஎம்.ஏ.சுமந்திரன் இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு கடும் ஆட்சேபனையை வெளியிட்டார். போராட்டம் அமைதியாகவே இடம்பெற் றது. பொலிஸாரே அராஜகமான முறை யில் அதை அடக்கினார்கள். பொலி ஸாரே சட்டத்தை மீறினார்கள். அத்து டன், வலிகாமம் வடக்கு பிரதேசசபை தனது சட்ட ரீதியிலான அதிகாரத்தைப் பிரயோகிக்கும் போது அதனை தடுக் கும் வகையில் சட்டவிரோத கடிதம் ஒன்றை பொலிஸார் அனுப்பியுள்ள னர். பொலிஸாரே வன்முறைகளைத் தூண்டும் வகையில் செயற்படுகின்ற னர் என்றும் சுமந்திரன் தெரிவித்தார்.

பொதுத்தொல்லைகள் மீதே இந்த வழக் குத் தொடுக்கப்பட்டுள்ளது. இவ்வா றான வழக்கொன்றை பொலிஸாரால் தாக்கல் செய்ய முடியாது. அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவர்களாக பொலி ஸாரே உள்ளனர் என்று சட்டத்தரணி சிறிகாந்தா தனது சமர்ப்பணத்தை முன் வைத்தார்.

இதனைத்தொடர்ந்து சட்டத்தரணி குமா ரவடிவேல் குருபரன், இங்கு குற்றவியல் நடைமுறைச்சட்டக்கோவை 106இன் கீழ் தொல்லைகள் பற்றிய அவசர விட யங்களில் தற்காலிக கட்டளைகள் 14 நாள்களுக்கு அதிகமாக வலுவுடைய தாக இருத்தல் ஆகாது என கோரிக்கை விடுத்து சமர்ப்பணம் செய்தார்.

சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிமன் றம், பிரதிவாதிகளை சொந்தப் பிணை யில் விடுவித்ததுடன் எதிர்வரும் 26ஆம் திகதிக்கு வழக்கைத் தவணையிட்டது. (அ-ம-26)

## வலுப்பெற்றது...

புவியியற்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத் துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதா வது:-

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் இலங்கைக்குத் தென் கிழக்குப் பகுதி யில் தற்போது காணப்படும் தாழ்வு நிலை வலுப்பெறுகின்றது. இது கிழக் குக் கரையூடாக நகர்ந்து, வடக்கு மாகா ணத்துக்கு மிக நெருக்கமாகப் பய ணித்து தமிழ்நாட்டை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத் தாழ முக்கம் காரணமாக வடக்கு, கிழக்கு, ஊவா, வடமத்திய, மத்திய தென் மாகா ணங்கள் கன மழையைப் பெறும் வாய்ப்புள்ளது. அத்துடன் வடக்கு மாகா ணத்தில் மின்னல் தாக்கங்கள் ஏற்படு வதற்கும் சாத்தியங்கள் உள்ளன. எதிர்வரும் 11ஆம் திகதிவரை இந்த மழையுடனான காலநிலை நீடிக்கும் - என்றுள்ளது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் ஆட்சிக்கு வெனிசுலாவில் இடமில்லை

## டெல்சி ரொட்ரிக்ஸ் அறிவிப்பு



கரஸ்கஸ், ஜன. 6

வெனிசுலாவின் எண்ணெய் வளத்தையும், தங்கத்தையும் அமெரிக்கா கொள்ளையிடுவதற்கு அனுமதிக்க முடியாது என்று வெனிசுலாவின் புதிய அதிபராகப் பொறுப்பேற்ற டெல்சி அறிவித்துள்ளார்.

வெனிசுலாவின் அதிபர் மதுரோ அமெரிக்கப் படைகளால் கைதுசெய்யப்பட்ட பின்னர், அந்த நாட்டின் உச்ச நீதிமன்றத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய, துணை அதிபர் டெல்சி அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார். இதையடுத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றும்போதே, வெனிசுலாவை நிர்வகிக்கும் அமெரிக்காவின் முடிவை திட்டவட்டமாக நிராகரித்தார்.

அதிபர் மதுரோவுக்கு எதிராக அமெரிக்காவால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அபாண்டமானவை. எங்களின் எண்ணெய் வளத்தையும், பெற்றோலியத்தையும் கொள்ளையிடவே அமெரிக்கா உண்மைக்குப் புறம்பான பல குற்றச்சாட்டுகளை முன்வைத்து தாக்குதல் நடத்தியது. வெனிசுலாவுக்குள் புறச்சக்திகள் எதற்கும் இடமில்லை என்றும் டெல்சி ரொட்ரிக்ஸ் தெரிவித்துள்ளார்.

இறைமையுள்ள வெனிசுலா, அதன் புதிய அரசாங்கத்தால் ஆளப்படும். எனக்கு எதிராக போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுகளோ அல்லது மனித உரிமை மீறல்களோ இல்லை. உச்ச நீதிமன்றத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய, எனது தலைமையிலான அரசாங்கம் வெனிசுலாவை ஆட்சி செய்யும் என்றும் வெனிசுலாவின் அதிபர் டெல்சி ரொட்ரிக்ஸ் கூறியுள்ளார்.

அதிபர் மதுரோதான் எமது அதிபர். அவர் இன்னும் எமது அதிபராகவே இருப்பார். வேறொரு பேரரசின் காலனித்துவ நாடாக வெனிசுலா ஒருபோதும் மாறாது. நாங்கள் இறப்புக்கும், கைதுக்கும் அஞ்சுபவர்கள் அல்லர். நாங்கள் அடிமைகளும் அல்லர். அமெரிக்கப் படைகள் உடனடியாக இங்கிருந்து வெளியேற வேண்டும் என்று வெனிசுலாவின் புதிய அதிபர் டெல்சி ரொட்ரிக்ஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

# அலங்கார உற்சவம்

துன்னாலை வடக்கு நவிட்டான்பதி மனோன்மணி சக்தி சமேத காளிகாம்பாள் ஆலயத்தின் அலங்கார உற்சவம் எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை பால்குட அபிஷேகத்துடன் கற்பூரத் திருவிழாவும், 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுமங்கலிப் பூசையும், 12ஆம் திகதி திங்கட்கிழமை மஞ்சத்திருவிழாவும், 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை குடமுழுக்கு உற்சவமும், 14ஆம் திகதி புதன்கிழமை பூங்காவனமும், 15ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத்திருவிழாவும், 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 17ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும், 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (க-100)

## வாசிப்பு மாத பரிசில் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.6

சாவகச்சேரிப் பிரதேசசபை மிருசுவில் பொதுநூலகத்தால் நடத்தப்படும் தேசிய வாசிப்பு மாத பரிசில் நாள் நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உசன் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

தவிசாளர் பொ.குகதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற மருத்துவ அதிகாரி

ஐ.ஜெபநாம கணேசன் கலந்து கொள்வார். நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும், போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கலும் இடம்பெறும். (க-131)

## பருத்தித்துறையில் யோகாசன வகுப்பு

யாழ்ப்பாணம்,ஜன.6

பருத்தித்துறையில் யோகா ஆசான் இரட்ணசோதியால், யோகாசனபயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைவாக அஞ்சலியகத்தில் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 6.30 மணி முதல் 7.45 மணி வரையும், பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியில் உள்ள ஞானாலயத்தில் பிரதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணி முதல் 6.45 மணி வரையும் யோகாசன பயிற்சி வகுப்புகள் இடம்பெறும்.

(க-100)

வீட்டு வேலைக்கு ஆள் தேவை

வீட்டு வேலை மற்றும் 1 வயது குழந்தையைப் பராமரிப்பதற்கு அனுபவமுள்ள பெண் தேவை

- குழந்தை பராமரிப்பில் அனுபவம் கட்டாயம்
- 30 வயதிற்கு மேற்பட்டவர்கள்

இடம் : சிங்கப்பூர்

தொடர்பு: 077 870 9260

(CS 30624) E

காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் வசாவிளான் பாடசாலை முன் பாக 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பலாலி வீதி 50m தூரம்
- வசாவிளான் மத்திய கல்லூரி 150m தூரம்
- நிலப்பரப்பு, செம்மண் தரை, நண்ணீர் ஊற்று
- 18 அடி பாதையுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 074 029 2338
076 990 3039

(CS 31205) A

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 12 . 1947



மறைவு
05 . 01 . 2026

### திருமதி சிவஞானவதி விஸ்வலிங்கம்

**(ஓய்வுபெற்ற அதிபர் யாழ் செங்குந்தா இந்துக் கல்லூரி, முன்னாள் கொத்தணி அதிபர் நவாலி மகா வித்தியாலயம்)**

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சிவஞானவதி விஸ்வலிங்கம் அவர்கள் 05.01.2026 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - கனகம்மா தம்பதியரின் ஏக புத்திரியும், நடராஜா - நல்லம்மா தம்பதியரின் மருமகளும், மார்க்கண்டு குமாரசுவாமி (ஓய்வுபெற்ற பிரதம மருந்தாளர், யாழ் போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்புச் சகோதரியும், நடராஜா விஸ்வலிங்கம் (சட்டத்தரணி) அவர்களின் அன்பு மனைவியும், பிரியதரிசினி (சட்டத்தரணி, கனடா), Dr.சிவதரிசினி (GP, Australia), கிரிசாந்தி (ஆசிரியை, Khairiya Girls College Colombo), திருக்குமரன் (சட்டத்தரணி), மணிவண்ணன் (சட்டத்தரணி, முன்னாள் யாழ் மாநகர முதல்வர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வக்ஸமன் (Apotex Pharmaceuticals கனடா), சிவதாஸ் (கணக்காளர், Australia), Dr ரமேஸ்குமார் (கொழும்பு தேசிய வைத்தியசாலை), கஜபிரியா (சட்டத்தரணி), அபிராமி (விரிவுரையாளர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஹர்சினி (McMaster University), லக்சிகா (கனடா), கிருத்திக் (Australia), கவிஸ் (Australia), சாகித்தியா, அபிநயா, இலக்கியன், தேனுஜா மற்றும் ஆர்த்திக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், பரமநாதன் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - புகையிரத திணைக்களம்) அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2026) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**021 222 3153**

**கொக்குவில் மேற்கு, கொக்குவில்**

திருக்குமரன் - 077 967 9597
மணிவண்ணன் - 077 959 9361

(CR 46838) E



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org